**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 196/2013**

**அ.சா : 4**

| | | |
|---|---|---|
| பெயர் | : | தங்கராஜ் |
| தகப்பனார் /கணவர்பெயர் | : | சண்முகம் |
| ஊர் | : | கிருஷ்ணகிரி |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | கிராம நிர்வாக அலுவலர், கல்லுக்குறுக்கி |
| மதம் | : | |
| வயது | : | 40 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 22.04.2025.**

**1.2 எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கிருஷ்ணகிரியில் வசித்து கல்லுக்குறுக்கியில் கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 18.10.2013 ஆம் தேதி நான் கட்டிகானப்பள்ளி கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது காலை 7.30 மணிக்கு கிருஷ்ணகிரி தாலுக்கா காவல் நிலைய ஆய்வாளர் எனக்கு போன் செய்து அழைத்ததின் பேரில் நானும், எனது கிராம நிர்வாக உதவியாளர் கந்தன் என்பவரும் காலை 8.00 மணியளவில் கிருஷ்ணகிரி ஹவுஸிங் போர்டு விளையாட்டு மைதானம் பிரிவு சாலைக்கு சென்றோம். அங்கு காவல் ஆய்வாளர் ஒருவரை பிடித்து விசாரித்துக் கொண்டிருந்தார். அவரை கேட்டு விசாரித்ததில் தன் பெயர் திம்மா (எ) திம்மராஜ் (25) த/பெ.கிருஷ்ணப்பா பென்சப்பள்ளி அரசு குப்பம் அஞ்சல், தேன்கனிக்கோட்டை வட்டம் என்று சொன்னார். அவர் தன்னிச்சையாக தான் நகைகளை திருடியதை ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.

2. ராமசாமி மற்றும் லட்சுமணன் ஆகியோர்கள் தனக்கு பழக்கம் ஏற்ப்பட்டதாக கூறினார். அவர்களுடம் சேர்ந்த நகைகளை பறிக்க திட்டம் போட்டதாக கூறினார். முதலாவதாக திம்மா (எ) திம்மராஜ் மட்டும் காவேரிப்பட்டினம் பாரத கோவில் அருகே வீட்டின் மாடியில் இருந்து இறங்கி வந்த ஒரு பெண்ணிடம் இருந்து காலை 5.00 மணியளவில் தங்க செயினை பறித்ததாகவும், பாதி செயின் அறுப்பட்டு அந்த பெண்ணிடம் பாதியும், தன் கையில் பாதியும் வந்ததாகவும், அந்த நகையை தேன்கனிக்கோட்டை பென்சப்பள்ளி கிராமத்தில் உள்ள தனது வீட்டில் ஒளித்து வைத்திருப்பதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

3. மேலும் கிருஷ்ணகிரி ஹவுஸிங் போர்டு அருகே நகைகளை பறிக்க திட்டம் போட்டுக்கொண்டிருந்ததாகவும் அப்பகுதியில் பெண்கள் யாரும் வராததால் திருவண்ணாமலை ரோடு பில்லக்கொட்டாய் அருகே முனீஸ்வரன் கோவில் அருகே நடந்து சென்ற ஒரு பெண்ணிடம் திம்மா (எ) திம்மராஜ் முகத்தில் கர்சிப் கட்டிக்கொண்டு ராமசாமியுடன் மோட்டார் சைக்கிளில் சென்று நடந்த சென்ற பெண்ணிடம் 5 1/2 பவுன் கழுத்தில் இருந்த தங்க செயினை பறித்து அங்கிருந்து தப்பு ஓடியதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதன் பிறகு ராஜாஜி நகர் கிருஷ்ணகிரி மாலை 5.30 மணியளவில் ஒரு பெண்ணிடம் 6 பவுன் தங்க செயினை கழுத்தில் இருந்து பறித்ததாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

4. ஒசூர் சிப்காட் பகுதியில் உள்ள கிளமங்கலம் ஜங்ஷன் முதல் ஆனந்தவாடி ஜங்சன் ரோட்டின் அருகே ஒரு இரும்பு கடை முன்பு இருந்த ஒரு பெண்ணிடம் கழுத்தில் இருந்த 1 1/2 பவுன் தங்க செயினை பறித்ததாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். மேலும் கிருஷ்ணகிரி ஹவுஸிங் போர்டு விளையாட்டு மைதானம் அருகே

இரண்டு ஆண்கள் பேசிக்கொண்டிருந்தபோது அந்த ஆண்களிடம் எதிரி கத்தியை காட்டி மிரட்டி அவர்கள் பையில் இருந்த பணத்தை பறித்ததாகவும் ஒப்புதல் வாக்கமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், எனது கிராம உதவியாளரும் இருவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம்.

அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

**இல்லை**

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN

Distirct Munsif cum
Judicial Magaistrate
Digitally signed by
SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.